# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1892/37 - 2014 දෙසැම්බර් මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.12.11

*1892/37 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.- பீ. 7/2001.*

**1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

*1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்,*
*வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2014, திசெம்பர் 09.*

**ஒழுங்குவிதிகள்**

*2012 ஆம் ஆண்டு மே 15 ஆந் திகதிய 1758/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-*

*(1) 4 ஆம் ஒழுங்குவிதியில், (7) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-*

*“(7) நிரலில் ஏதேனும் பெயரை அல்லது பெயர்களைச் சேர்ப்பதற்கு அல்லது நிரலிலிருந்து ஏதேனும் பெயரை அல்லது பெயர்களை அகற்றுவதற்கு அல்லது நிரலிலுள்ள ஏதேனும் தகவலைத் திருத்துவதற்கு அல்லது நாளது வரையாக்குவதற்குத் தேவையொன்றுள்ளவிடத்து, வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நிரலுக்கான திருத்தம் என்ற வகையாக அது செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு திருத்தமும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.” ;*

*(2) 4 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளை உட்புகுத்துவதன் மூலமும் -*

*“ 4 அ. (1) ஓர் இயற்கை அல்லது சட்ட ஆளை, குழுவினரை அல்லது உருவகத்தைப் பெயர் குறிப்பதற்காக ஒரு வெளிநாட்டு அரசினாலான வேண்டுகோள் ஒவ்வொன்றும் அமைச்சருக்கு செய்யப்படுதல் வேண்டும்.*

*(2) வேண்டுகோளொன்றைப் பெற்றதன் மேல் அமைச்சர் உடனடியாக அத்தகைய வேண்டுகோளைத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.*

*(3) (அ) அமைச்சரினால் அனுப்பி வைக்கப்பட்ட வேண்டுகோளொன்றைப் பெற்றதன் மேல் தகுதிவாய்ந்த அதிகாரி இலங்கையிலுள்ள எவரேனும் இயைபான அதிகாரியுடன் உடனடியாகக் கலந்தாலோசிப்பதுடன், வெளிநாட்டு அரசினால் வழங்கப்பட்ட அத்தகவலை மதிப்பீடு செய்தலும் வேண்டும் ;*

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) ஒரு வெளிநாட்டு அரசினால் வழங்கப்பட்ட தகவல் போதியதல்லதெனத் தகுதிவாய்ந்த அதிகாரி கருதுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய அரசிடமிருந்து மேலதிகத் தகவலைக் கோரலாம்.

(4) எந்த இயற்கை அல்லது சட்ட ஆள், குழுவினர் அல்லது உருவகம் தொடர்பில் வெளிநாட்டு அரசு பெயர் குறித்தலை நாடியுள்ளதோ, அந்த இயற்கை அல்லது சட்ட ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் பெயர்குறித்தலுக்காகப் போதிய ஏதுக்கள் உள்ளனவெனத் தகுதிவாய்ந்த அதிகாரி தீர்மானிக்குமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய இயற்கை அல்லது சட்ட ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் பெயர்குறித்தலை அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

(5) எந்த இயற்கை அல்லது சட்ட ஆள், குழுவினர் அல்லது உருவகம் தொடர்பில் வெளிநாட்டு அரசு பெயர்குறித்தலை நாடியுள்ளதோ, அந்த இயற்கை அல்லது சட்ட ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் பெயர்குறித்தலுக்காகப் போதிய ஏதுக்கள் இல்லையெனத் தகுதிவாய்ந்த அதிகாரி தீர்மானிக்குமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய நிகழ்வை அமைச்சருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(6) அமைச்சர், இயைபான வெளிநாட்டு அரசினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் பற்றிய முடிவை அத்தகைய வெளிநாட்டு அரசுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

4 ஆ. (1) அமைச்சர், தகுதிவாய்ந்த அதிகாரியின் விதப்புரையின் மேல், இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அமைச்சரினால் பெயர் குறிக்கப்பட்ட எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆளை, குழுவினரை அல்லது உருவகத்தைப் பெயர்குறிக்கும்படி ஏதேனும் வெளிநாட்டு அரசைக் கோருதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் கீழ் விடுக்கப்பட்ட வேண்டுகோளொன்று பின்வருவனவற்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் பயனுள்ள மற்றும் செம்மையான இனங்காணலை இயலச் செய்கின்ற தகவல் ;

(ஆ) இலங்கையிலுள்ள அத்தகைய இயற்கை அல்லது சட்ட ஆளை, குழுவினரை அல்லது உருவகத்தைப் பெயர்குறிப்பதனை ஆதாரப்படுத்திய விபரங்கள் ; அத்துடன்

(இ) அத்தகைய வெளிநாட்டு அரசில் அத்தகைய ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் பெயர்குறித்தலை நியாயப்படுத்தக்கூடியதான வேறேதேனும் தகவல்".

(3) 5ஆம் ஒழுங்குவிதியில் -

(அ) (1) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(1) இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படியான பெயர்குறித்தலின் மேல் தகுதிவாய்ந்த அதிகாரி, அதற்கென ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம், பெயர்குறிக்கப்பட்ட ஓர் இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்கு அல்லது அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட இயற்கை அல்லது சட்ட ஆளுக்காகவும், குழுவினருக்காகவும் அல்லது உருவகத்துக்காகவும் மற்றும் அவர்கள் அல்லது அதன் சார்பிலும், அல்லது அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் பணிப்பின் மீது வேறெவரேனுமாளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்குச் சொந்தமான அல்லது முழுமையாக அல்லது கூட்டாக அவர்களினால் அல்லது அதனால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட எல்லா நிதிகளையும், வேறு நிதிசார் சொத்துக்களையும் மற்றும் பொருளாதார மூலவளங்களையும் உடனடியாக முடக்குதல் வேண்டும். நிதிகளும், ஏனைய நிதிசார் சொத்துக்களும் மற்றும் பொருளாதார மூலவளங்களும், அத்தகைய ஆள், குழுவினர் அல்லது உருவகம் பெயர் குறிக்கப்பட்டிருக்கும் காலம் வரை முடக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்." ;

(ஆ) (2) ஆம் பந்தியில் (அ) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(அ) இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி பெயர் குறிக்கப்பட்ட ஓர் இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்கு அல்லது அவரின் அல்லது அதன் நன்மைக்காக அல்லது அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட ஆளுக்காகவும் குழுவினருக்காகவும் அல்லது உருவகத்துக்காகவும் அல்லது அவர் சார்பில் அல்லது அதன் சார்பில் அல்லது அவரின் அல்லது அதன் பணிப்பின் மீது வேறெவரேனுமாளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்கு, அல்லது அவரின் அதன் நன்மைக்காக நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் எவையேனும் நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார மூலவளங்களை அத்துடன் நிதிசார் அல்லது வேறு தொடர்புபட்ட சேவைகளை, ஆளெவரும் கிடைக்கக் கூடியனவாக ஆக்குதலாகாது, " ;

*(4) 8 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளை உட்புகுத்துவதன் மூலமும் :-*

"*8அ. (1) தாம் பெயர் குறிக்கப்பட்ட ஆள் அல்லவென உரிமைகோரும் எவரேனுமாள், அத்தகைய ஆள் நிரலிற் பெயர் காணப்படுகின்ற ஆளல்லவெனக் கூறுகின்ற சான்றிதழொன்றை வழங்கும்படி கோரி தகுதிவாய்ந்த அதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம். தகுதிவாய்ந்த அதிகாரி, அது தொடர்பில் தோதானவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்ததன் மேலும் மற்றும் விண்ணப்பகாரர் பெயர்குறிக்கப்பட்ட ஓர் ஆளல்லவென்பது நிலைநாட்டப்பட்டாலும், அப்பொருள்பட்ட சான்றிதழொன்றை விண்ணப்பக்காரருக்கு வழங்குதல் வேண்டும்.*

*(2) ஓராம் பந்தியின் கீழான சான்றிதழொன்றை வழங்க மறுப்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி முடிவு செய்யுமிடத்து, அதற்கான காரணங்களுடன் தமது முடிவை நியாயமான காலப்பகுதியொன்றினுள் அவர் விண்ணப்பக்காரருக்கு அறிவித்தல் வேண்டும்.*

*8ஆ. ஒழுங்குவிதி 8அ இன் கீழான தகுதிவாய்ந்த அதிகாரியின் முடிவினால் இன்னலுற்ற எவரேனுமாள், அதனை மீளாய்வு செய்வதற்காக, அம்முடிவு எத்தேதியன்று அவருக்கு அறிவிக்கப்பட்டதோ அத்திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் அத்தகைய முடிவுக்கெதிராக மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.*" ;

*(5) 9 ஆம் ஒழுங்குவிதியில், (1) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-*

"*(ஆ) பின்வருவன தொடர்பான தகவலை, விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்கு வழங்குதல் வேண்டும் :-*

(i) *நிதிகளின் நிலைமை, முடக்குதல் நடவடிக்கைகள் மற்றும் நிதிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட வேறெவையேனும் நடவடிக்கைகள் ;*

(ii) *பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காக இயைபான நிறுவகத்தினால் வைத்திருக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான அல்லது பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காக ஆளொருவரினால் வைத்திருக்கப்பட்ட எவையேனும் நிதிகளின், ஏனைய நிதிசார் சொத்துக்களின் மற்றும் பொருளாதார மூலவளங்களின் தன்மையும் தொகையும் அல்லது அளவும் ;*

(iii) *பெயர் குறிக்கப்பட்டவோர் ஆளினால் அல்லது அவரின் சார்பிலான ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் ;*

(iv) *முடக்கப்பட்ட நிதிகள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் தொடர்பிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் ; அத்துடன்*

(v) *இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதலை வசதிப்படுத்தும் வேறேதேனும் தகலவல்.* " ;

*(6) 12 ஆம் ஒழுங்குவிதியில், (3) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-*

"*(4) தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதில் எவரேனுமாளுடன் அல்லது அரசாங்க நிறுவனத்துடன் கலந்தாலோசிக்கலாமென்பதுடன், அவரிடமிருந்து அல்லது அதனிடமிருந்து தகவலைப் பரிந்து கேட்கவும் செய்யலாம்.*".

*12- 913/1*

---

*ச.வ.- பீ. 7/2001.*

**1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

*1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்,
*வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.*

கொழும்பு,
*2014, திசெம்பர் 09.*

2 - G 20742

**ஒழுங்குவிதிகள்**

*2012 ஆம் ஆண்டு மே 31 ஆந் திகதிய 1760/40 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-*

*(1) 15 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும் :-*

*"15அ. (1) அமைச்சர், காலத்துக்குக்காலம், பாதுகாப்பு என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ, அந்த அமைச்சரின் கலந்தாலோசனையுடனும் மற்றும் தகுதிவாய்ந்த அதிகாரியின் விதப்புரையின் மீதும், பின்வருவோரின் அல்லது பின்வருவனவற்றின் பெயர்குறிப்பை தடைசெய் குழுவுக்கு முன்மொழியலாம் :-*

*(அ) அல்- கைதாவுடன் அல்லது தலிபானுடன் இணைந்துள்ளவரென நம்புவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு நியாயமான ஏதுக்கள் உள்ள எவரேனும் இயற்கை ஆள் ;*

*(ஆ) அல்- கைதாவுடன் அல்லது தலிபானுடன் இணைந்துள்ளவரென அல்லது இணைந்துள்ளதென நம்புவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு நியாயமான ஏதுக்கள் உள்ள எவரேனும் சட்ட ஆள், ஏதேனும் குழுவினர் அல்லது உருவகம் ;*

*(இ) மேலே (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயற்கை அல்லது சட்ட ஆட்களினால், குழுவினர்களினால் அல்லது உருவகங்களினால் நேரடியாகவல்லாமல் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட எவரேனும் சட்ட ஆள், ஏதேனும் குழுவினர் அல்லது உருவகம் ; அத்துடன்*

*(ஈ) மேலே (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இயற்கை அல்லது சட்ட ஆட்களின், குழுவினர்களின் அல்லது உருவகங்களின் சார்பில் அல்லது அவர்களின் அல்லது அவற்றின் பணிப்பின் மீது செயலாற்றுகின்ற எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள், ஏதேனும் குழுவினர் அல்லது உருவகம்.*

*(2) ஓராம் பந்தியின் கீழான பெயர் குறிப்புக்கான முன்மொழிவொன்று, சம்பந்தப்பட்ட ஆட்கள், குழுவினர்கள் மற்றும் உருவகங்களுக்கெதிராக முடிவுறாதுள்ள குற்றவியற் புலனாய்வொன்று அல்லது வழக்கு நடவடிக்கைகள் உள்ளமையைப் பொருட்படுத்தாது, சம்பந்தப்பட்ட அத்தகைய ஆட்கள், குழுவினர்கள் மற்றும் உருவகங்கள் தொடர்பில் ஏதேனும் இயைபான மூலத்திலிருந்தான திட்டவட்டமான தகவலின் அல்லது விடயத்தின் அடிப்படையின் மீதானதாகவிருத்தல் வேண்டும்.*

*(3) தகுதிவாய்ந்த அதிகாரி, (1) ஆம் பந்தியின் கீழ் பெயர் குறிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்ட இயற்கை அல்லது சட்ட ஆட்களின், குழுவினர்களின் அல்லது உருவகங்களின் பெயர்கள் அத்தகைய இயற்கை அல்லது சட்ட ஆட்களை, குழுவினர்களை அல்லது உருவகங்களைப் பயனுள்ள வகையிலும் செம்மையாகவும் இனங்காண்பதனை அனுமதிப்பதற்குப் போதிய விபரங்கள் இணைக்கப்பட்டனவாக இருக்கின்றமையை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.*

*(4) தகுதிவாய்ந்த அதிகாரி, தடைசெய் குழுவினால் பெயர்குறிக்கப்பட்டு அமைச்சரினால் செய்யப்பட்ட ஏதேனும் முன்மொழிவின் விளைவாகத் திரட்டிய நிரலில் வெளியிடப்பட்ட பெயர்கள், திரட்டிய நிரலில் அத்தகைய பெயர்களை வைத்திருப்பதற்கு அல்லது அதிலிருந்து அவற்றை அகற்றுவதற்கு அல்லது அத்தகைய பெயர்களுடன் சம்பந்தப்பட்ட தகவலை நாளதுவரையாக்குவதற்கு ஏதுக்கள் உள்ளனவென்பதை உறுதிப்படுத்துவதற்கெனக் கிரமமான கால இடைவெளிகளிலும் மற்றும் ஒவ்வோராண்டும் ஒரு தடவையேனும் மீளாய்வு செய்யப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.*

*(5) ஏதேனும் பெயரைத் திரட்டிய நிரலில் வைத்திருத்தல் மேலும் அவசியமானதல்லதென (4) ஆம் பந்தியின் கீழ் பெயர்களை மீளாய்வு செய்வதன் மேல் வெளிக்காட்டப்படுமிடத்து, அமைச்சர், அத்தகைய பெயரைத் திரட்டிய நிரலிலிருந்து அகற்றும்படி தடைசெய் குழுவுக்கு முன்மொழிதல் வேண்டும்.*

*(6) திரட்டிய நிரலில் சேர்க்கப்பட்ட எவரேனும் பெயர் குறிக்கப்பட்ட ஆள் தொடர்பான ஏதேனும் தகவலை நாளதுவரையாக்குவதற்கான தேவையுள்ளவிடத்து, அமைச்சர், அத்தகைய தகவலைத் தடைசெய் குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.*

*(7) அமைச்சரானவர் –*

*(அ) (1) ஆம் பந்தியின் கீழ் பெயர்குறிக்கப்படுவதற்கான பெயரொன்றை முன்மொழியுமிடத்து;*

(ஆ) (5) ஆம் பந்தியின் கீழ் திரட்டிய நிரலிலிருந்து ஏதேனும் பெயரை அகற்றுவதற்கு முன்மொழியுமிடத்து;

(இ) (6) ஆம் பந்தியின் கீழ் எவரேனும் தகவலை நாளதுவரையாக்குவதற்கென ஏதேனும் தகவலை அறிவிக்குமிடத்து,

அமைச்சர், அத்தகைய நோக்கத்துக்காகத் தடைசெய் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் நியமப் படிவங்களையும் பின்பற்றுதல் வேண்டும்.

(8) ஆளெவரும், பெயர்குறிப்புக்கான முன்மொழிவொன்று செய்யப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும், அத்தகைய ஆள், குழுவினர் அல்லது உருவகம் முன்மொழியப்படுகின்றார் அல்லது முன்மொழியப்படுகின்றது அல்லது அத்தகைய முன்மொழிவுக்குக் கவனத்திற் கொள்ளப்படுகின்றார் அல்லது கவனத்திற்கொள்ளப்படுகின்றது என அவ்வாளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்கு அறிவித்தல் வழங்குதலாகாது.

(2) 12 ஆம் ஒழுங்குவிதியில், (1) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஆ) பின்வருவன தொடர்பான தகவலை, விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்கு வழங்குதல் வேண்டும்:-

(i) நிதிகளின் நிலையும், 5 ஆம், 6 ஆம் ஒழுங்குவிதிகளின் கீழான முடக்குதல் நடவடிக்கைகள் மற்றும் நிதிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட வேறெவையேனும் நடவடிக்கைகள்;

(ii) பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காக இயைபான நிறுவனத்தினால் வைத்திருக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கான அல்லது பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காக ஆளொருவரினால் வைத்திருக்கப்பட்ட எவையேனும் நிதிகளின், ஏனைய நிதிசார் சொத்துக்களின் அல்லது பொருளாதார மூலவளங்களின் தன்மையும், தொகையும் அல்லது அளவும் ;

(iii) பெயர் குறிக்கப்பட்டவோர் ஆளினாலான அல்லது அவரின் சார்பிலான ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் ;

(iv) முடக்கப்பட்ட நிதிகள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்கள் தொடர்பிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் ; அத்துடன்

(v) இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதலை வசதிப்படுத்தும் வேறேதேனும் தகலவல்.

(3) 16 ஆம் ஒழுங்குவிதியில், (3) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(4) தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதில் எவரேனுமாளுடன் அல்லது அரசாங்க நிறுவனத்துடன் கலந்தாலோசிக்கலாமென்பதுடன், அவரிடமிருந்து அல்லது அதனிடமிருந்து தகவலைப் பரிந்து கேட்கலாம்.".

12- 913/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.